கவனிக்க.- 2018.07.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2081 - 2018 ජූලි මස 20 වැනි සිකුරාදා - 2018.07.20

*2081 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1414 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1425 |


**கவனிக்க.-** (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மக்கள் வங்கி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, ஒகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1411-B 81431-5,403 (2018/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தரக் கடற்படையின் கைவினை பகுதியில் பயிலுனர் கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

2. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தரக் கடற்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(அ) ***குடியுரிமை*** - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***வயது*** - 2018. 09. 28 ஆந் தியதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 24 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) ***உயரம்*** - 5 அடி 5 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஈ) ***நிறை*** - 47 கிலோ கிராமிற்கு (105 இறாத்தல்) குறையாதிருத்தல் வேண்டும்.

(உ) ***மார்பு*** - 32 அங்குலத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

(ஊ) ***பார்வை வர்ணப்பதிவு மட்டம்*** - எஸ்டீ II

(எ) ***தொலை பார்வை*** - இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக் கண்ணாடி மற்றும் கண்ணாடியில்லை இன்றி)

(ஏ) ***குடியியல் அந்தஸ்து*** - விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலுனர் எவரும் பயிற்சியின் போது மற்றும் " பலநெவி " தரத்திற்கு தகுதி பெறும் வரையில் திருமணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. **கல்வித் தகைமைகள் :**

(அ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட மூன்று வருடகால முழு நேர தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிக்காக கீழ் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்:-

01. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (கடற்படை பொறியியல்)

02. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (மின் பொறியியல்)

03. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் மின் பொறியியல்)

04. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சுய நகரும் பொறியியல்)

05. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (கப்பற்பாகம் பழுதுபார்த்தல் மற்றும் கப்பல்களின் கட்டுமானம்)

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதப் பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழி மற்றும் விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். மேலும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் பாடங்களுக்காக சாதாரண சித்தி அடைந்திருத்தல் வேண்டும். (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்று ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

**குறிப்பு** : க. பொ. த. (சா. த.) கல்வித்தகைமைகள் தொடர்பாக மேலதிக பாடங்கள் கவனத்தில் கொள்ளப்படாததுடன் விளையாட்டுத்துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திறமைகள் தொடர்பாக உரியவாறு கவனத்தில் கொள்ளப்படும்.

4. மேலே இரண்டாம் மற்றும் மூன்றாம் பந்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வைமட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் வேண்டப்பட்ட அளவுகளுக்கேற்ப உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியவற்றைக்

கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் உயரம் உரிய அளவில் இல்லாதிருந்தும் இராணுவ சேவைக்கு பயனுள்ள விசேட திறன்கள் இருந்தால் கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பதாரிகள் பயிலுனர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளையும் கற்றல் வேண்டும்.

(ஆ) பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் பயிலுனர்கள் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(இ) அனைத்து பயிலுனர்களுக்கும் சகல சின்னங்களுடனான சீருடை உபகரணங்கள் என்பன வழங்கப்படும்.

(ஈ) பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் பயிலுனர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவு கடற்படையிடமிருந்து வழங்கப்படும்.

(உ) பயிற்சிபெறும் கால எல்லையினுள் எவரேனும் ஒரு பயிலுனர்க்கு தமது பயிலுனர் தன்மையை தமது சுயவிருப்பில் இடைநிறுத்துவதற்கு தேவைப்பட்டால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் பயிலுனர்க்காக அதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து செலவினங்களையும் குறித்த பயிலுனரினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.

(ஊ) பயிற்சி பெறுகின்ற கால எல்லையினுள் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் எவரேனும் ஒரு பயிலுனரின் துர்நடத்தை மீது அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனுமொரு காரணத்தின் மீது அவர் கடற்படைச்சேவைக்கு உகந்தவரல்ல என பொறுப்பானவர் ஒருவரினால் தீர்மானிக்கப்பட்டால் அச்சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட பயிலுனரினால் அவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு இணங்குவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவராக கடற்படைத் தளபதியுடன் பிணையொன்றிற்கு உட்படுதல் வேண்டும்.

(எ) எல்லா கடற்படையினரும் இலங்கையில் எப்பாகத்திலும் அல்லது வெளி நாடொன்றிற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படும் நியதிக்கு உள்ளாவர்.

6. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள் :** தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் மொழிக் கொள்கையினை செயற்படுத்தும் பொருட்டு இதன்பின்னர் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் சட்ட விதிகளை பின்பற்றுதல் வேண்டும்.

7. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

2016.01.01 ஆந் திகதியிலிருந்து 03/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இதற்கமைய-

| | | |
|---|---|---|
| (அ) | அடிப்படைச் சம்பளம் | - ரூபா 20,798.00 |
| (ஆ) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | - ரூபா 7,800.00 |
| (இ) | சீருடை பேணுதல் கொடுப்பனவு | - ரூபா 170.00 |
| (ஈ) | கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தப் பிரதேசங்களில்) | - ஆரம்ப பயிற்சியின் பின் |
| (உ) | கஷ்ட கொடுப்பனவுகள் (யுத்தமற்ற பிரதேசங்களில்) | - அடிப்படைப் பயிற்சியின் பின் |
| (ஊ) | ஏனைய கொடுப்பனவுகள் | - விசேட கொடுப்பனவு ரூபா 1000.00 |
| | | விசேட மேலதிகக் கொடுப்பனவு ரூபா 2400.00 |
| (எ) | தனிப்பயன்கொடுப்பனவு | - ரூபா 9,822.00 க்கு |
| (ஏ) | குறைந்தபட்ச மொத்த சம்பளம் | - ரூபா. 38,876.00 |

**குறிப்பு :** கடற்படை வீரர்களின் அடிப்படைச் சம்பளம் 2020.01.01 ஆந் திகதி ரூபா 30,140.00 என்பதோடு பின்வருமாறு சம்பள உயர்வுகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 2016. 01. 01 | - | 176 x 5 – 210 x 19 |
| 2020. 01. 01 | - | 300 x 5 – 370 x 19 |

(ஐ) இலவசமாக புகையிரதத்தில் பிரயாணம் செய்யக்கூடிய மூன்று சோடிப் புகையிரத ஆணைச்சீட்டு ஆண்டொன்றுக்கு (கடற்படை வீரருக்கும், துணைவிக்கும், பிள்ளைகளுக்கும், சார்ந்திருப்பவர்களுக்கும்) உரித்தாகும்.

(ஒ) முகாமில் வசிக்கும் கடற்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை அலுவலர் விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் கட்டணம் செலவினம் செலுத்தப்படும்.

(ஓ) இலவசமருத்துவவசதிகள்வழங்கப்படும்.(கடற்படைவீரருக்கு,துணைவிக்கு,பிள்ளைகளுக்கு,சார்ந்திருப்பவர்களுக்கும்)

(ஔ) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான கடற்படை வீரர்களுக்கு மாதாந்தம் ரூபா 1,600 தொடக்கம் 4,250 வரையிலானவீட்டு வாடகைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர்.

(க) திருமணமான கடற்படை வீரர்களுக்காக விவாகமானவர்களின் விடுதிகளில் வெற்றிடங்களின் அடிப்படையில் விடுதிகள் வழங்கப்படும். இதற்காக அரச சேவையினருக்கு உரியவாறு வீட்டு வாடகை அறவிடப்படும்.

8. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்திற்கேற்ப விண்ணப்பத்தின் அனைத்து விபரங்களுடன் மற்றும் தெளிவாக தமது கையெழுத்தால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2018.09.28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக " சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்(ஆட்சேர்ப்பு),கடற்படைத்தலைமையகம்,த.பெ.இல.593,கொழும்பு"என்றமுகவரிக்குபதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலுனர் கடற்படை தொழில்நுட்பவியலாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் " என குறித்தல் வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு மற்றும் நேரத்திற்கு பின்கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இவ் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக காணப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான மேலதிக தகவல்களை www.navy.lk இணையத்தின் ஊடாக அல்லது 0112215162 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) அரசாங்க வேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/சிவில் நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கலாம் என்ற சான்றிதழுடன் திணைக்களத்தின்/ சபையின் /சிவில் நிறுவனத் தலைவரின் ஊடாகசமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அல்லது ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்பட்டால் விண்ணப்பதாரர்கள் பினவரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ்;

(2) விண்ணப்பித்திருக்கும் பிரிவுகளுடன் தொடர்பான கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் கல்விச் சான்றிதழ்;

(3) பாடசாலை விடுகைச் சான்றிதழ்;

(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்ப அல்லது அனுபவமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் ;

(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றுப்பத்திரங்கள் அதில் ஒன்று விண்ணப்பதாரர் இறுதியாக தாம் கற்ற பாடசாலை அதிபரினாலும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரரைப் பற்றி அறிந்த பொறுப்பான ஒரு நபரிடமிருந்து அல்லது தற்போதைய சேவை வழங்குனரிடமிருந்து (தற்போது சேவையில் ஈடுபட்டிருந்தால்) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(7) விளையாட்டு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ்கள்.

(ஈ) உரிய சந்தர்ப்பங்களில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

(உ) வேறு ஆவணங்கள் அல்லது மூலப்பிரதிகள் எவையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டு குறித்த சான்றிதழ்கள் காணாமற் போகும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக கடற்படை பொறுப்புக்கூறாது.

9. விண்ணப்பத்தில் பொய்யான தகவல்களை வழங்குதல், குறித்த பொய்யான தகவல்கள் தொடர்பாக விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவதற்கு முன் தெரியவருமிடத்து அவரின் பயிலுனர் தன்மையை இரத்து செய்வதற்கும், தெரிவு செய்யப்பட்டதன் பின் தெரியவருமிடத்து அவரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் உட்படுதல் வேண்டும்.

10. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை முதலியன**:

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்காக இலங்கைக் கடற்படையினரால் நடாத்தப்படுகின்ற ஆரம்ப மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ்க் குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரரகளுக்கு தெரிவு சபை ஒன்றின் முன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்

| உடற்பயிற்சி | காலம் (நிமிடம்/செக்கன்) | தடவைகள் |
|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | 07 நிமிடம் 30 வினாடி | |
| Push up | 02 நிமிடம் | 20 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Sit up | 02 நிமிடம் | 15 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |
| Arm Bending | 02 நிமிடம் | 07 தடவைகள் அல்லது அதற்கு மேலதிகமாக |

(ஆ) நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தபாலில் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பிரயாணச் செலவுகள் அல்லது வேறு எவ்வித செலவுகளும் செலுத்தப்படமாட்டாது.

(இ) இப்பதவிக்காக விண்ணப்பதாரர் அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குப் பின் தகுதியானவர்களான விண்ணப்பதாரிகள் கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவராயினும் அவ்வாறு சிபாரிசு செய்வது அவருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமேயாகும். விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் உந்துதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது விடயமாக அறிவிக்கப் படமாட்டாது.

(எ) **குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன் சிங்களம் மற்றும் ஆங்கில பதங்களுக்கிடையில் இணக்கமின்மை காணப்படின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான பதம் வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

எஸ். எஸ். ரணசிங்ஹ,
டப்ளியூடப்ளியூவீ, ஆர்டப்ளியூபீ, வீஎஸ்வீ,
யூஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ, ஏஓடப்ளியூசீ,
துணைத் தளபதி,
கடற்படைக் கட்டளைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## இலங்கைக் கடற்படையின் கைவினைஞர்கள் (Artificers) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்

01. தேசிய இனம் : ..................................................................................................................
(பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையா என்பதை குறிப்பிடுவதோடு பதிவு மூலம் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)

02. விண்ணப்பிக்கும் பிரிவு (முன்னுரிமை அடிப்படையில்): ..............................................................................

03. முழுப் பெயர் (தேசிய ஆள் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) : ....................................................

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ............................................................................

05. நிரந்தர முகவரி : ..........................................................................................

06. தபால் முகவரி : ....................................................................................

07. பிறந்த திகதி : ...............................................................................................

08. வயது (2018, செத்தெம்பர் 28 ஆந் திகதிக்கு) :
வருடங்கள் : .......................... மாதங்கள் : ......................... நாட்கள் : ...................

09. உயரம் : ....................... (செ. மீ.) மார்பு : ................................ (செ. மீ.) நிறை : ...................................... (கி. கி.)

10. நிரந்தர முகவரிக்கு அண்மைய பொலிஸ் நிலையம் : .............................................

11. மாவட்டம் : .......................................................

12. தேர்தல் தொகுதி : .......................................

13. கிராம அலுவலர் பிரிவு : ....................................................

14. தொலைபேசி இலக்கம் : ................................................

15. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? ....................................................

16. பால் (ஆண்/பெண்) : ...........................................

17. சமுகமளித்த பாடசாலைகள் : ...............................................

18. சமுகமளித்த பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ................................................

| பாடசாலை / பல்கலைக்கழகத்தின் பெயர் | பரீட்சையின் வகை | பரீட்சைக்கு தோற்றிய ஆண்டு | சித்தியடைந்த பாடம் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.)<br>க. பொ. த. (உ. த.)<br>வேறு: | | |

19. பாடசாலை/பல்கலைக்கழகத்திலிருந்து விலகிய பின்னரானதொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்)

| தொழில் தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| தந்தை | | | | |
| தாய் | | | | |

21. இப் பதவிக்கான ஏதேனும் விஷேட தகைமை : ..........................................

22. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகளின் திகதி/ வருடம் மற்றும் ஏனையவை ஆகியவற்றுடன் பெற்றுக் கொண்ட தரம்/மட்டங்கள் தொடர்பான விபரங்கள்):

..........................................................................................................................................

23. பாடசாலையில் / பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களில் பெற்றுக் கொண்ட ஏனைய சாதனைக் குறிப்புகள் (திகதிகள்/வருடங்களுடன் விபரங்களை குறிப்பிடவும்) :

..........................................................................................................................................

24. ஆயுதப்படை அல்லது தொண்டர் படையில், பயிலிளவல் பயிற்சிப்படையில் அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு ஆகியவற்றில் முன்னர் வகித்த ஏதேனும் சேவை:

..........................................................................................................................................

25. இலங்கைக் கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீரா? : ..........................................................................................................

அவ்வாறாயின் அது தெடர்பான விபரங்களையும் முடிவுகளையும் குறிப்பிடவும்: ...........................................................

..........................................................................................................................................

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் தண்டிக்கப்பட்டுள்ளீரா? அல்லது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளீரா? :.......

அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக:

..........................................................................................................................................

27. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/சபை/கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கி, பல்கலைக்கழகங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் கூட்டு களஞ்சிய கம்பனிகள் மற்றும் வேறு) ஆகியவற்றில் ஏலவே சேவையில் ஈடுபட்டிருப்பின் அத் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணங்கள்:

..........................................................................................................................................

28. நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

29. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய உறுதிமொழி :

மேற்படி வினாக்களுக்கு கொடுக்கப்பட்ட பதில்கள் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கைவினைஞர்கள் (Artificers) பிரிவுக்கு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் தொடர்பாக பிரயோகிக்கப்படும் விதிகளையும், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் வாசித்துப் புரிந்து கொண்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ...................................................

7-625

## அரசாங்க சேவைகள் ஆணைக் குழு

பாதுகாப்பு அமைச்சு

### பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு திறந்த ஆட்சேர்ப்பு (உயர் பதவி பிரிவின் விசேட வகுப்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயக பதவியில் நிலவுகின்ற பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு இவ் அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. ஆட்சேர்ப்பு முறை.-** அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தகுதி மதிப்பு நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற தகுதி மதிப்பு நேர்முகப்பரீட்சையில் உயர் புள்ளிகளை பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். அதன்போது அரச சேவைகள் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இலக்கம் 6 இல் குறிப்படப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தகுதி மதிப்பு நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

**02. தேவையான தகைமைகள்:-**

i. ***கல்வித் தகைமைகள் :-***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதாரண பட்டம் மற்றும் பொறியியல் விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்துறைகளில் கலை முதுமானி/விஞ்ஞான முதுமானி பட்டப்பின்கல்வி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

ii. ***அனுபவம்:***

(அ) அரச அதிகாரிகளுக்கு:

உயர் பதவிப் பிரிவின் வகுப்பு I இல் 5 வருடங்கள் திறமையான சேவைக்காலத்தினைக் கொண்ட 18 வருடங்களுக்கு குறையாத திறமையான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்தல் மற்றும் I ஆம் வகுப்பிற்கு தரம் உயர்த்தப்பட்டதன் பின்னர் சம்பள உயர் ஐந்தினை (05) பெற்றிருத்தல் மற்றும் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுகின்ற தினத்திற்கு அண்மித்த ஐந்து (05) வருடங்கள் திறமையான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) இராணுவத்தில் மேஜர் ஜெனரல் அல்லது அப்பதவிக்கு இணையான முப்படைகள் சேவைப் பதவியின் அதிகாரியாக குறித்த துறையில் ஐந்து (05) வருடங்கள் திறமையான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iii. ***தொழில் தகைமைகள்:***

தொழில் தகைமைகள் பெற்றிருப்பின் அத்தகைமைகள் மேலதிக தகைமைகளாக கருதப்படும்.

iv. ***உடல்நிலைத் தகைமைகள்***

இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய போதுமான உடல்நிலைத் தகைமைகளைப் பெற்றிருத்தல் மற்றும் உளநிலைத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

v. ***ஏனைய தகைமைகள் :***

அனைத்து விண்ணப்பதாரிகளும்

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சிறந்த நன்நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று சேர்த்துக்கொள்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**03. சேவை நிபந்தனைகள் :-**

i. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய கொடுப்பனவிற்கு உட்பட்டது. ஓய்வூதிய முறை தொடர்பாக இனி அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு கீழ்பட வேண்டும்.

ii. அரச சேவைகள் ஆணைக்குழு சட்ட ஒழுங்கு விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, அரச நிதி கோவை மற்றும் ஏனைய திணைக்களங்களின் உத்தரவுகளுக்கு இந் நியமனம் உட்பட்டது.

**04. வயதெல்லை:-**

விண்ணப்பம் கோரப்படுகின்ற இறுதித் தினத்தன்று 40 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

**05. சம்பள அளவுதிட்டம்:-**

இப்பதவிக்கு ரூபா 88,000 - 2700 × 12 - ரூபா 1,20,400 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தினைக் கொண்டது.

(2016.02.25 ஆந் திகதி பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் இலக்கம் 03/2016 இலக்கம் SL – 03-2016 சம்பளப் பிரிவு)

**06. தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை பின்வரும் புள்ளி வழங்கல் ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டது:-**

| | பாடம் | புள்ளிகள் | உயர்ந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள்<br>(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் சாதாரண பட்டம்<br>➢ முதலாவது வகுப்பு சாதாரண சித்தி<br>➢ இரண்டாவது வகுப்பு உயர் சித்தி<br>➢ இரண்டாவது வகுப்பு சாதாரண சித்தி<br>(ஆ) பொறியியல் விஞ்ஞானம் /தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்துறைகளில் முதுமானி/விஞ்ஞானபதி, பட்டப்பின்கல்வி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். | 10<br>07<br>03<br>10 | 20 |
| 02 | தொழில் தகைமைகள்<br>➢ இலங்கை பொறியியல் நிறுவனத்தின் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் நிறுவனத்தின் அங்கத்துவம் பெற்றிருத்தல் | 20 | 20 |
| 03 | மேலதிக அனுபவம்<br>(அ) அரச அதிகாரிகளுக்கு<br>➢ உயர் பதவி பிரிவின் வகுப்பு I இல் 5 வருடங்கள் மற்றும் திறமையான சேவைக்காலத்துடன் 18 வருடங்களுக்கு குறையாத திறமையான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்தல் (I ஆம் வகுப்பில் 05 வருடங்களுக்கு மேல் அதிகரிக்கின்ற ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 06 வருடங்களுக்கு )<br>(ஆ) இராணுவ அதிகாரிகளுக்கு<br>➢ இரணுவத்தில் மேஜர் ஜெனரல் அல்லது அப்பதவி நிலைக்கு இணையான முப்படைகள் சேவை அதிகாரியாக குறித்த துறையில் ஐந்து (05) வருடங்கள் திறமையான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (05 வருடங்களுக்கு மேல் அதிகரிக்கின்ற ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 06 வருடங்களுக்கு | 30<br>30 | 30 |
| 04 | செயலாற்றுகை மற்றும் திறன்கள்<br>➢ சிறப்பான<br>➢ திருப்திகரமான<br>➢ சாதாரண | 05<br>03<br>02 | 25 |
| 05 | நேர்முகப்பரீட்சையின் போது காட்டப்படுகின்ற திறன்கள்<br>➢ தலைமைத்துவம்<br>➢ தொடர்பாடல்<br>➢ ஆளுமை | 02<br>01<br>01 | 05 |
| | மொத்தம் | | 100 |

**07. விண்ணப்பதாரியின் அடையாளப்படுத்தல்கள்:-**

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் அனுப்பிய விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப்பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப்பரீட்சையின் போது தனது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை;

ii. செல்லுப்படியான கடவுச்சீட்டு.

**08. விண்ணப்பப்பத்திரங்களை முன்வைத்தல்:-**

i. விண்ணப்பப்பத்திரம் 2018.08.21 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் "செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இலக்கம் 15/5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 03" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அதன் பின் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

ii சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி, அவ்வறிவித்தலில் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் A4 அளவுள்ள கடதாசியைப் பயன்படுத்தி முதல் பக்கத்தில் இல.01 தொடக்கம் 05 வரையிலும் இரண்டாவது பக்கத்தில் இல.06 தொடக்கம் 08 வரையிலும் உள்ளடக்கும் வகையிலும் தனது கையெழுத்தில் விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

iii. கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயக பதவிக்கு விண்ணப்பித்தல்"என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரச பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையில் ஆணையதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது ரூ. 47,615 மாதாந்த சம்பளம் பெறுகின்ற அரச நிரந்தர சேவை அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

v. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண சேவை உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

vi. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல், தபாலில் ஏற்படும் தாமதங்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**09. பொய்யான தகவல்கள் வழங்குதல்:**

நீங்கள் அனுப்பப்படுகின்ற விண்ணப்ப படிவத்தில் உள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானது என சேர்த்துக்கொள்வதற்கு முன் தகவல் கிடைக்கப்பெற்றால் அவரின் விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறு சேர்த்துக்கொண்டதன் பின்னர் நீங்கள் வழங்கிய தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானது என தகவல் கிடைக்கப்பெற்றால் அதற்கான நடவடிக்கைகளுக்கு கீழ்பட்டு சேவையில் இருந்து நீக்கப்படுவீர்கள்.

வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் அல்லது பூர்த்தி செய்யாமல் இருத்தல் அரச சேவைகள் ஆணைக் குழுவின் அதிகாரமாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் உத்தரவின் படி,

கபில வைத்யரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
இலக்கம்15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு 03,
2018, யூலை 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு திறந்த ஆட்சேர்ப்பு**

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :- திரு./திருமதி/செல்வி :..........................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.2 முழுப்பெயர் : ...........................................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர் :...........................................................................................................................................
(சிங்களத்தில்)

02. 2.1 நிரந்தர முகவரி : ...........................................................................................................................................

2.2 தொலைபேசி இலக்கம் : ............................................... கையடக்க தொலைபேசி : ................................................

03. 3.1 இனம் : சிங்களவர் -1, தமிழர் - 2, முஸ்லிம் -3, ஏனைய -5 [ ]

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக)

3.2 ஆண்/பெண் :

| | |
|---|---|
| | |

3.3 திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :

| திருமணமானவர் | | திருமணமாகாதவர் | |
|---|---|---|---|

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக)

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

3.5 பிறந்த திகதி : ஆண்டு : ....... மாதம் ................ திகதி

3.6 2018.08.21 ஆந் திகதியில் வயது : வருடங்கள்....... மாதங்கள் ................ நாட்கள்

04. 4.1 கல்வித் தகைமைகள் :

4.1.1 சாதாரண பட்டம் :-

i. பட்டம் அமுலாகும் திகதி :

ii. பல்கலைக்கழகம்/நிறுவனம் :

iii. பட்டம் :

4.1.1 கலைமுதுமானி/விஞ்ஞான முதுமானிப் பட்டம் :-

i. பட்டம் அமுலாகும் திகதி :

ii. பல்கலைக்கழகம்/நிறுவனம் :

iii. பட்டம்:

4.2 அனுபவம் :-

4.2.1 அரச அதிகாரிகளுக்கு :

(அ) முழுமையான சேவைக்காலம் :.........................

(ஆ) முதல் நியமனத் திகதி :.........................

(இ) உயர் பதவிப் பிரிவில் I ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி மற்றும் சேவைக்காலம் :.........................

4.2.2 இராணுவத்தில் மேஜர் ஜெனரல் அல்லது அப்பதவி நிலைக்கு இணையான பதவி நிலையுடைய முப்படைகள் அதிகாரியாக இருப்பின் :-

(அ) அப்பதவி நிலைக்கு நியமிக்கப்பட்ட திகதி :

(ஆ) அப்பதவி நிலையில் சேவைக்காலம் :

05. ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டிருப்பின் அதன் திகதி மற்றும் வழக்கு இலக்கத்துடன் முழுமையான விபரங்களை வழங்கவும்.

06. **விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :**

இவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன் நிரூபிக்கப்பட்டால் அதன் காரணமாக நான் இப்பதவிக்கு தகுதி அற்றவராகவும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின் அக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் எவ்வித இழப்பீட்டுத் தொகையும் செலுத்தாமல் சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

...............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ......................

07. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

அதிபர்,சமாதான நீதவான்,ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் ஆணையதிகாரம் பெற்ற அதிகாரி,பொலிஸ் சேவையில் வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய அதிகாரி அல்லது ரூபா 5,71,380 க்கு அதிகமான வருடாந்த அடிப்படை ஊதியம் பெறுகின்ற அரச நிரந்தர பதவி வகிக்கின்ற அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுகின்ற ..................................................................(முழுப்பெயர்) திரு./ திருமதி/செல்வி தனிப்பட்ட வகையில் தெரிந்தவர் என்றும் ...............ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
(கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அதிகாரியின்
கையொப்பம்).

கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அதிகாரியின் முழுப்பெயர் : ............................................
பதவி : .............................................
விலாசம் : ..............................................
(முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
திகதி : ..........................................

08. விண்ணப்பதாரி அரச ஊழியராக இருப்பின் திணைக்களத் தலைவரின் அறிக்கை

இவ் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுகின்ற ...................................................... (முழுப்பெயர்) தனிப்பட்ட வகையில் தெரிந்தவர் என்றும் ........................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

அவரின் வேலை,வருகை மற்றும் நடத்தை ................. என்று உறுதிப்படுத்துகின்றேன். தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

............................
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்).

பெயர் : .............................................
பதவி : .............................................
(முத்திரையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
திகதி : ............................................

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் திணைக்கள தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு
(எம். என். 03 - 2016) ஆட்சேர்ப்புசெய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2018

01. மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் திணைக்கள தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புசெய்வதற்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பகாரரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

பதவிகளின் எண்ணிக்கை -03

02. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்கள் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் பதவி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

03. **கல்வித் தகைமைகளும் தொழில் தகைமைகளும்:**

***கல்வித் தகைமைகள்:***

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலமொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) பிரயோக கணிதம், தூய கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞான/கணித பாடத்துறைக்கு உரிய மூன்று பாடங்களில் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

**தொழில் தகைமைகள்**

(i) மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது

(ii) தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் பொறியியல் தேசிய டிப்ளோமா அல்லது

(iii) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது

(v) தொழில் துறைக்குரிய தேசிய தொழில் திறன் NVQ 06 மட்டத்தின் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது

(vi) உயர்கல்வி அமைச்சினாலும் மேற்படி தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கிய நிறுவகங்களுடனான கலந்தாலோசனையுடன் மேற்படி தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானதென மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

04. **உடல் தகைமைகள்.**- அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

05. **பிற தகைமைகள் :-**

(i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல்.

(ii) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமொரு மதப்பிரிவின் துறவுநிலைபூண்டவராக இருக்கின்ற ஆளெவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவராக மாட்டார்.

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான மேலே காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தலில் வர்த்தமானப் பத்திரிகையில் குறித்துரைக்கப்படும் திகதிக்கு அத்தகைய தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

06. **வயதெல்லை :-**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (அதன்படி விண்ணப்பகாரரின் பிறந்த திகதி 2000. 08. 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரும் 1988. 08. 20 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரும் இருப்பின் மட்டுமே வயது சம்பந்தமாக தகுதியைப் பூர்த்திசெய்தவர்களாகக் கருதப்படுவர்.)

07. **ஆட்சேர்ப்புத் திட்டம்**. - எழுத்துமூலப் பரீட்சை

பரீட்சை நடைபெறவுள்ள இடமும் மாதமும் - கொழும்பு நகரம்

பரீட்சையை நடத்த எதிர்பாாக்கும் மொழிமூலங்களாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டும் என்பதுடன் விண்ணப்பகாரர்களினால் கோரப்பட்ட மொழிமூலங்களை பின்னர் மாற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டா.

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் | காலம் மணித்தியாலங்கள் | மொத்தப் புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | அபேட்சகரின் சிந்திக்கும், நியாயிக்கும், பகுப்பாய்வு நிலைமைகளை நிர்ணயிக்கும் ஆற்றல்களை பரீட்சிப்பதற்கான வினாக்களைக் கொண்டது. | 01 | 100 | 40 |
| விடயத்தோடு இணைந்த தொழில்நுட்பப் பரீட்சை | கட்டட நிர்மாண மூலக் கோட்பாடுகள், நிர்மாணப் பணிகளுக்கு கிடைப்படம் தயாரித்தல், வாசித்து விளங்கிக்கொள்ளும் ஆற்றல், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் ஆற்றல், நீர்வழங்கல், வடிகாலமைப்பு முறைகளும் கழிவுப்பொருள் அகற்றல் செயன்முறைகளும் பற்றிய அபேட்சகரின் திறமைகளை மதிப்பிடுவதற்கான வினாக்களைக் கொண்டது. | 03 | 100 | 04 |

எழுத்துமூலப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்களை பொதுவான ஒரு நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி தகுதிகள் குறித்து பரீட்சித்த பின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

08. **சம்பள அளவுத்திட்டம் :-**

ரூபா 31,040 – 445 x 10 – 660 x 11 – 730 x 10 – 750 x 10 - ரூபா 57, 550.
எம். என். 203 – 2016 (பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன்படி)

09. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

1. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தல் வேண்டும்.

2. நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

10. இவ்வறிவித்தலின் நியதிகளுடன் இணங்கியொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டா என்பதுடன் தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

12. (i) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் சரியான முறையில்

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைத்துள்ள விண்ணப்பகாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளைக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும். விண்ணப்பகாரர் அவ்வாறு விசாரிக்கும்போது தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பகாரரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பகாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக விண்ணப்பகாரரின் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைப்பதுடன் விசாரிப்பது மிகவும் பயனுடையதாகும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் யாதேனுமொரு தகவலை உறுதிப்படுத்த தன் கைவசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பப்படிவத்தைத் தபாலிடும் போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் தயார்நிலையில் வைத்திருப்பதும் பயனுடையதாகும்.

(ii) இவ்வறிவித்தலின் பந்தி 07 இன்படி ஒவ்வொரு பாடத்திற்கும் 40% வீதத்திற்குக் குறையாமல் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்களின் பெறுபேறுகள் அடங்கிய ஆவணம் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பகாரர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் அல்லது www.results.exam.gov.lk என்ற இணையத்தளத்தில் காட்சிப்படுத்துவதன் மூலம் பெறுபேறுகள் குறித்து அறிவிக்கப்படும்.

13. **விண்ணப்பிக்கும் முறை :-**

(அ) பரீட்சைக்கான அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்படிவத்தின் மாதிரியைத் தழுவியதாக A4 அளவான காகிதத்தில் இரு பக்கங்களையும் உபயோகித்து மாதிரி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் முதலாம் பக்கத்தில் இல. 01 தொடக்கம் 05 வரையான தலைப்புகளும் இல. 6 தொடக்கம் மேற்கொண்டு தலைப்புகளின் ஒழுங்கின்படி ஏனைய பக்கங்களும் அடங்குமாறு விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். சிங்கள விண்ணப்பபடிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் அத்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். இவ்வறிவித்தலில் அடங்கியுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைத் தழுவியமையாததும் பூர்த்தியற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். ஆகையால், விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்க முன்னர் அவ்விண்ணப்பப்படிவம் அப்பரீட்சைக்கான அறிவித்தலில் குறிப்பிடப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவானதா என்பதும் எல்லாத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதும் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்பகாரர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரித்து விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடப்பக்க மேல்மூலையில் "மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப (எம். என். 03) சேவை வகுதியின் திணைக்கள தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச்செய்வதற்கான போட்டிப்பரீட்சை – 2018" எனக் குறிப்பிட்டு 2018.08.20 ஆந் திகதிக்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. எண். – 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி, 2018. 08. 20 ஆகும்.

(இ) பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 இல் வரவுவைத்து நாட்டின் எந்தவொரு தபாலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்கு காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதுடன், பரீட்சைக்கு செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணங் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டா.

(ஈ) பரீட்சை மண்டப அதிபரினால் பரீட்சை அபேட்சகரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பின்வரும் ஆவணங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு

அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை வழங்குவதன் காரணமாக அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலாகாது.

(உ) அபேட்சகர் ஒருவர் தனக்கு குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், அபேட்சகர் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது நாளிலேயே அங்குள்ள பரீட்சை மண்டப அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டா.

14. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இலங்கை நிர்வாக சேவையின்/கல்வி நிர்வாக சேவையின் /அரச கணக்காளர் சேவையின்/அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான் ஒருவர்/ சட்டத்தரணி ஒருவர் அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 2,40,360 க்குக் குறையாத சம்பளமொன்றைப்பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் ஒரு பதவியை வகிக்கும் அரசாங்க அலுவலர் ஒருவரினால் விண்ணப்பகாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போது அரசாங்க சேவையிலுள்ளவர்களாயின், திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**கவனிக்க :**

விண்ணப்பப்படிவத்தின் ஒவ்வொரு பிரிவும் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதையும் அத்தகைய தகவல்களின் உண்மைத்தன்மை பற்றியும் உறுதிசெய்யப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்டவாறு ஆட்சேர்ப்புச்செய்யப்படும் அனைவரும் அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான எல்லாச் சட்டதிட்டங்களுக்கும் இலங்கைச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் விதித்துரைக்கப்படும் கொள்கைகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் பிற ஒழுங்குவிதிகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் இயற்றப்படும் சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டவர்களாதல் வேண்டும்.

பதவிக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இப்பொதுவான சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படும் அல்லது உள்ளடக்கப்படாத யாதேனுமொரு விடயம் தொடர்பில் பிரச்சினைக்குரிய ஒரு நிலைமை உருவாகுமாயின், அது குறித்து அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதியானதாக இருக்கும். அதேபோல், இச்சுற்றிக்கையின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள மொழி உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

எந்திரி (கலாநிதி) பொன்னையா சுரேஷ்,
செயலாளர்,
மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு.

2018, யூலை 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள்**

அமைச்சின் திணைக்கள தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு (எம். என். 03-2016) ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

Open Competitive Examination for Recruitment to the Post of Departmental Technical Officer (MN. 03 - 2016) of the Ministry of Resettlement, Rehabilitation, Northern Development and Hindu Religious Affairs – 2018

வசிக்கும் மாவட்டம் : ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 02
தமிழ் - 03 ☐
ஆங்கிலம் - 04
(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்.)

1.0 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):...........................................................................

.......................................................................................................................................................

(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 கடைசியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ............................................................

.......................................................................................................................................................

(உதாரணம் GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : .........................................................................................

2.0 2.1 முகவரி (பிரத்தியேக): .............................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 முகவரி (பிரத்தியேக): .............................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

2.3 முகவரி (அலுவலக): ...........................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.4 முகவரி (அலுவலக) : .......................................................................
(சிங்களத்தில் /தமிழில்)

2.5 அனுமதி அட்டையை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி : ..................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

(அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபன சேவையிலுள்ள அலுவலர் ஒருவர் அவரது அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரி மற்றும் ஏதுமிருப்பின், அதுபற்றிய உடன் அறிவிக்க வேண்டும்.)

3.0 பால் நிலை :-

பெண் - 1
ஆண் - 0 ☐
(உரிய இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

4.0 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 5.1 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத்தி திகதிக்கு வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6.0 கையடக்கத் தொலைபேசி இல :

7.0 கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை :

வருடம் : .............................. சுட்டிலக்கம் : .........................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை :

வருடம் : .............................. சுட்டிலக்கம் : ........................

| இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

(இ) வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரம் :

| சான்றிதழ் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஈ) பிற விசேட தகைமைகளும் அனுபவமும் :...........................................

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுகொண்ட பற்றுச்சீட்டின் விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : .............................................................................

(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :.....................................................................................................

(iii) செலுத்திய தொகை : .........................................................................................

(பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்)

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கே கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவாறு உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன். இப்பரீட்சைக்கான நிபந்தனைகளின்படி என்னால் பிழையான தகவல்கள் ஏதும் வழங்கப்பட்டிருப்பின், பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சை அபேட்சகர் அந்தஸ்து இரத்துச்செய்யப்படலாம் என்பதையும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது பற்றி வெளிப்படுமாயின் பணிநீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி.......................................

10.0 விண்ணப்பகாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி /செல்வி .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் ............................................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர் :
பதவி :
(பதவிவழி இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்)

*11.0* திணைக்களத் தலைவரின் சிபார்சு : (அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்கு மட்டும்)

*11.1* உத்தியோகத்தரின் ஆள்சார் கோப்பின்படி, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன்முந்திய ஐந்து வருடங்களில் வேலை, நடத்தை, வருகை திருப்திகரமானது/ திருப்திகரமற்றது. எல்லாச் சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளார் / ஈட்டவில்லை. எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/ உட்படுத்தப்பட்டுள்ளார்.

*11.2* விண்ணப்பிக்கும் பதவிக்குத் தெரிவுசெய்யப்படின், தற்போதைய பதவியிலிருந்து இந்த அலுவலரை விடுவிக்க முடியும்/முடியாது. விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்கின்றேன் /சிபார்சுசெய்யவில்லை.

.....................................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி இலச்சினையும்.

திகதி : .......................................

7 - 512

---

## நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

இலங்கை சுங்கத் திணைக்களம்

### இலங்கைச் சுங்கத்திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் - II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம்- II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2018, நவெம்பர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை சுங்கத்திணைக்களம் கொண்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

*02.* **தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம் பின்வரும் விடயங்கள் தொடர்பிலான திருப்திகரமான சான்றிதழினை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) இலங்கைப் பிரசையாகவும் ;

(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ;

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்கு குறையாதவராகவும் 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (இதற்கமைய. 1996.08.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்கள் அல்லது 1990.08.20 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரம் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்).

**குறிப்பு**:- ஏதேனும் சமயக்கிளையில் மதகுரு அந்தஸ்திலுள்ள எந்தவொரு நபருக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) ***உடற் தகைமைகள்:*** ஆண்களின் விடயத்தில். அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும். பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) ***கல்வித் தகைமைகள்:*** விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித்தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்:-

(அ) அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக்கழகத்தில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் :

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியினை பெற்றிருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடமான ஆங்கில மொழியானது கவனத்திற் கொள்ளப்படமாட்டாது).

அல்லது

(இ) கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை (ஆகக்குறைந்தது) பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**: பட்டப் பரீட்சையொன்றின் பெறுபேற்றிற்காக காத்திருக்கும் எந்தவொருவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவராகமாட்டார். எனினும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பரீட்சையில் சித்தியடைந்த ஆளொருவர் அப்பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார் என்ற விடயம் அடங்கிய உத்தியோகபூர்வ கடிதமொன்றை பல்கலைக்கழக பதிவாளரிடமிருந்து பெற்று அதை சமர்ப்பிக்குமிடத்து அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படலாம்.

03. **சேவை நிபந்தனைகள் :**

(i) வேதனம் : இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு:- எம்.என் : 5
ரூபா 34,605 - 660 × 10 - 755 × 11- 930 ×15 - ரூபா 63,460
(பொது நிருவாக சுற்றறிக்கை இல.3-2016)

(01.01.2016 ஆந் திகதி தொடக்கம் 01.01.2020 ஆந் திகதி வரையிலான சம்பள கொடுப்பனவானது 03-2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க அமையும்)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் மற்றும் எதிர்காலத்தில் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கும் உட்படும்.

(iii) வெற்றிகரமான பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுக்காலப்பகுதிக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக்கூடிய உடல் நிலை தகுதியினை உடையவரா இல்லையா என்பதனை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமான அறிவித்தலில் பகுதி I:தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படுகின்றது.

04. ***பரீட்சைத் திட்டம்*** : ஆட்சேர்ப்புக்கான பரீட்சைத்திட்டம் வருமாறு :

| | புள்ளிகள் |
|---|---|
| (01) உளச்சாரப்புப் பரீட்சை (01 மணித்தியாலம்) | 100 |
| (02) ஆங்கில மொழி (01½ மணித்தியாலங்கள்) | 100 |
| மொத்தம் | 200 |

***உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள் :*** இவ் வினாத்தாளானது பரீட்சார்த்தியினது மொழித் திறன்கள், கணித அறிவு மற்றும் தர்க்க ரீதியான அறிவினை அளவிடும் வகையில் 50 பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய விடையளிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

***ஆங்கில மொழி வினாத்தாள் :*** பரீட்சார்த்திகளது வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு** : இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளிலும் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயோ (உதாரணமாக: சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) அல்லது அரசகரும மொழியொன்றிலேயோ விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி விண்ணபத்திற் கொடுத்த பரீட்சை மொழியை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்;

(ii) இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சாத்தி ஒருவர் பரீட்சைக்கான அனுமதி அட்டையினை பெறுவதன் மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருத முடியாது;

(iii) ***மதிப்பிடுகை*** : ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 60% வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் அவர்களது மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஒரு முன்னுரிமைப்பட்டியலில் பட்டியலிடப்படுவர். கூடுதலான மொத்தப்புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமையளித்து. வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான விண்ணப்பதாரர்கள் முதற்கட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன்பின்னர் வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் ஒரு பொது நேர்முகப்பரீட்சைக்கு ஆற்றுப்படுத்தப்படுவர். இதன் போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது என்பதுடன் விண்ணப்பதாரர்களது தராதரங்கள் தொடர்பிலான தகவல்கள் சரிபார்க்கப்படும்.

முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :

வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள் :
முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.
மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள் :
முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.
தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள் :
முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

**வலய மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள்** :

முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.
மாவட்ட மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள் :
முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.
தேசிய மட்டத்தில் குழு விளையாட்டுக்கான புள்ளிகள் :
முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

05. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை** : எழுத்துப்பரீட்சையிலும் நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு நியமனம் அளிக்கும் வகையில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களது எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவுசெய்யப்படுவர்.இணைந்த ஆளணி வெற்றிடங்களில் 10% ஐ விட விஞ்ஞாத எண்ணிக்கை பெண் பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

05. (i) **பெறுபேறு வெளியிடுகை** – எழுத்துப் பரீட்சை மற்றும் முதற்கட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றில் தகைமையுடைய பரீட்சார்த்திகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலான சிறப்புத் தகைமை ஒழுங்கில் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் பற்றிய பட்டியலானது பரீட்சைகள் திணைக்களத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைத் திணைக்களமானது பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் அவர்களது பெறுபேறுகளை தபால் மூலமாக அனுப்பிவைக்கும் அல்லது பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.results.exams.gov.lk இல் பிரசுரிக்கும்.

**குறிப்பு** : சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

06. விண்ணப்பதாரர் ஆண்-பெண் ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) *இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழி மூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில். விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுத லானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 01 தொடக்கம் 06 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 07 தொடக்கம் 11 வரையிலானவை இரண்டாவது பக்கத்திலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்). சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தினது பிரதியொன்றினை தம்முடன் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். மேற்கூறப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத மற்றும் உரியவாறு பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால், உங்களது விண்ணப்பப்படிவமானது இவ் அறிவித்தலுடன் காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப பூரணமாகவும் துல்லியமாகவும் இருப்பதையும் மேலும், பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது அதன் உரிய விபரங்கள் குறிப்பிடப்பட்டு, உரிய இடத்தில் ஒட்டப்பட்டிருப்பதைப் பரீட்சிக்குமாறும் இத்தால் மேலும் வேண்டப்படுகின்றீர்கள்.*

(ii) *பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களானது "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு 2018.08.20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் பெறப்படும் எந்தவொரு விண்ணப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.*

(iii) *பரீட்சைக் கட்டணமாக ரூபா 750 வினை ஏதாவது தபால் - உப தபால் அலுவலகத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003.02.13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக்கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகின்றது. இக்கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படவோ அல்லது அதற்குப் பதிலாக வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படவோ மாட்டாது.*

(iv) *அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களி னூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2018.08.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

*விண்ணப்பங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப்பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பத்தில் திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர் விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப்படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

(v) *<u>உறுதிப்படுத்துதல் :</u> அரசாங்க சேவையிலுள்ளதொரு விண்ணப்பதாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பரமான ஆணையாளர். வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு. அரசாங்க பாடசாலை அதிபர், கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பவர்.*

*08* (i) ***பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம்*** : வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பீட்டின்படி வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குட்பட்ட மற்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக்கட்டணம் செலுத்திய மற்றும் பரீட்சைக்கு தோற்ற திட்டமிட்டுள்ள மொழியும் நகரத்தின் பெயர் அடங்கலாக உரிய முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்துள்ள, விண்ணப்பதாரரின் கையொப்பம் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் பரீட்சைக்கட்டண பற்றுச்சீட்டுடன் திணைக்களத் தலைவரது (பொருத்தமாயின்) உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை பூரணப்படுத்திய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் பரீட்சைகள் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கைக் கடிதமொன்றினை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தினை தொடர்பு கொள்ளவதற்கு மிகவும் பொருத்தமாகவிருக்கும் (அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு) இதன்போது பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் இலக்கம் என்பவற்றுடன் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் இதனை மேலும் இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

(ii) விண்ணப்பதாரி ஒருவர், அவருக்கென. ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தினை கட்டாயமாக முன்கூட்டியே சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதோடு, பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே மேற்படி சான்றுப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை மேற்பார்வையாளரிடம் கையளித்தலும் வேண்டும். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. பரீட்சாத்திகளுக்கான விதிகளும் ஒழுங்கு விதிகளும் இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றிய அறிவித்தலானது விண்ணப்பதாரர்களுக்கு விநியோகிக்கப்படமாட்டாது. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு** : பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

*09.* விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் - விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையிலான சான்றுகளை ஒவ்வொரு பாடத்திற்குமாக மேற்பார்வையாளரிடம் காண்பித்தல் வேண்டும். இதற்காக பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும்:

(அ) ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு;

மேலே குறிப்பிட்ட எந்தவொரு ஆவணத்தினையும் சமர்ப்பிக்கத் தவறுகின்றதோர் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தத் தன்மையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படக் கூடியதாகும்.

*10.* **தகைமை ஆவணங்கள் :**

(i) பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு மற்றும் தலைப்பு 02 இன் கீழ் (பொருத்தமாயின்) குறிப்பிடப்பட்டுள்ள "குறிப்பு" என்பவற்றுடன் தொடர்புடைய ஆவணங்கள் தவிர்ந்த பிற ஆவணங்கள், சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்களது போட்டோ பிரதிகள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். உரிய முறையில் பூர்த்தி செய்ய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்.

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு** : இத்தகைய குணநலச்சான்றிதழானது சமாதான நீதவான், வழக்கறிஞர், வதிவிடப் பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொன்றிக்கு ரூபா 240,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்தவர்கள் இலகுவாக சிபாரிசு பெற்றுக்கொள்ளக்கூடியதுமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுபடுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநல சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படமாட்டார்கள்).

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவினது சான்றுபடுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விஷேட சான்றிதழ் (பிறப்பு பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்).

**குறிப்பு** :

(i) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) பிறப்புச்சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப்பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பரீட்சார்த்திகள் சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச்சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27ஆம் அல்லது 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப்பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப்பிரஜை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள் ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்).

(iv) கல்வித்தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோக பூர்வ ஆவணங்கள், அதாவது, பல்கலைக்கழக பதிவாளர் ஒருவரினால் விண்ணப்பதாரி பட்டப்பரீட்சையில் சித்திபெற்றுள்ளார் என்ற உத்தியோகபூர்வ கடிதம் பரீட்சைகள் திணைக்களத்தினால் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர)சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி அல்லது கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை அவர் பெற்றுள்ளார் என்பதனை குறிப்பிட்டு வழங்கப்பட்ட அப்பரீட்சையின் பெறுபேற்றுத்தாள்.

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பெற்றுக்கொண்ட நிரூபண ஆவணம்.

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும் படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றை சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை**.- இப்பரீட்சைக்கான ஒழுங்கு விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் என தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களை தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக்காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை கண்டிப்பாக பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த தன்மையானது இரத்துச் செய்யப்படும்.

12. இந்த ஒழுங்கு விதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரின் தற்றுணிபின் படி கையாளப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் யாதேனும் வித்தியாசம் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்,
இலங்கைச் சுங்கத் திணைக்களம்.

"சுங்க இல்லம்",
இல. 40. பிரதான வீதி,
கொழும்பு 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் - II பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POSTS OF ASSISTANT SUPERINTENDENT OF CUSTOMS, GRADE- II DEPARTMENT OF SRI LANKA CUSTOMS - 2018

[ ]
(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழி மூலம்:

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

01. விண்ணப்பதாரியின் பெயர் :

1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

..............................................................................................................................................

(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக முதலெழுத்துக்களுடனான பெயர்: ..............................................................................

(உதாரணம் :- GUNAWARDHANA.H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்):.......................................................................................

02. நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

..............................................................................................................................................

அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :

..............................................................................................................................................

03. தேசிய ஆள் அடையாள அட்டையினது விபரங்கள் :

3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி : | | | | | | | | |

04. பால் :
ஆண் - 0
பெண் - 1
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

05. (அ) பிறந்த திகதி:

| ஆண்டு | | | | மாதம் | | திகதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(ஆ) விண்ணப்பம் முடிவுத்திகதியன்று வயது:

| வருடங்கள் | | மாதங்கள் | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

06. நீங்கள் இலங்கைப் பிரசையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும் :..........................................
ஆமெனில் :

வம்சாவழி மூலம் : 1
பதிவு மூலம் : 2
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

07. இனம் :
சிங்களவர் - 1 இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3 முஸ்லீம் - 4
பறங்கியர் - 5 ஏனையோர் - 6
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

08. தொலைபேசி இலக்கம் :

09. உடற்தகைமை தேவைப்பாடுகள் :

(i) உயரம் : ........ அடி ......... அங்குலங்கள்

(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்):

......... .அங்குலங்கள்

(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

10. நீர் ஏதாவது குற்றச் செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா): (ஆம்/இல்லை):........
ஆம் எனின், விபரங்களை குறிப்பிடவும் : ..........................…

11. கல்வித் தகைமைகள் :

| பல்கழைக்கழகத்தினது பெயர் | பட்டம் | பட்டத்தினது தன்மை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(i) க.பொ.த. (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் பெற்ற ஆகக் கூடிய சித்தி:

வருடம் : .....................

சுட்டிலக்கம் : .................

(ii) க.பொ.த (உயர் தர) சான்றிதழ் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் பெற்ற ஆகக் கூடிய சித்தி:

வருடம் : .....................

சுட்டிலக்கம் : .................

12. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம்:....

II. செலுத்திய பணம் :............. III. செலுத்திய திகதி :................

IV. பற்றுச்சீட்டு இலக்கம் :...................

| |
|---|
| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்) |

(இந்த விபரங்கள் கட்டாயமாக கொடுக்கப்படல் வேண்டும்)

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை/சான்றுப்படுத்தல் :

விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட விடயங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு வழங்கப்படுகின்ற ஏதேனும் விடயங்கள் பொய்யானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகைமை இழப்பதற்கு ஆளாவேன் என்பதையும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்படின் எந்தவொரு நஷ்டஈடும் இன்றி குறித்த சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்படுவதற்கும் நான் இத்தால் உடன்படுகிறேன்.

............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :…..……..

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்
(பொருத்தமற்றதை வெட்டிவிடவும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................. என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2018 .................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டானது இணைக்கப்பட்டுள்ளது எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் . ...................
பதவி . ...................................................................
விலாசம் . ................................................
திகதி . ................................

**குறிப்பு** : இவ் உறுதிப்படுத்தலானது வர்த்தமான அறிவித்தலின் 7(V) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

15. சேவையாற்றும் இடத்தின்/நிறுவனத் தலைவரின் விதப்புரை:

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................. என்பவர் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில்/சபையில்/ கூட்டுத்தாபனத்தில் கடமை புரிபவர் என்றும் அவர் மேலே குறிப்பிட்ட பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும்.

...............................
நிறுவனத் தலைவரினது கையொப்பம்
(அலுவலக முத்திரை).

நிறுவனத் தலைவரது பெயர் :
பதவி :..........................
சேவையாற்றும் இடத்தின் விலாசம் :
திகதி : ..........

7-619

## காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு

நிலஅளவையாளர் திணைக்களம்

### இலங்கை நிலஅளவையாளர் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை

நிலஅளவையாளர் திணைக்களத்தில் அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவியின் தன்மை :**

அளவை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக உபகரணங்களையும் கருவிகளையும் பராமரித்தல் மற்றும் சீர்ப்படுத்தல்.

2. (i) **தோற்ற வேண்டிய பரீட்சை வினாத்தாள்கள்:**

| பாடங்கள் | காலம் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100% | 40% |
| தொழில்நுட்ப வினாத்தாள் | 02 மணித்தியாலங்கள் | 100% | 40% |

(ii) இவ்வினாத்தாள்களின் மூலம் பெறப்படும் முழுப்புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு நடைபெறும்.

3. **ஆட்சேர்ப்புத் தரம் :**

அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் பதவியின் தரம் III

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். இந்த நியமனம் 03 ஆண்டுகாலம் தகுதிகாண் நிலைக்கு உட்படும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு நீங்கள் உட்படுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுத்தொகை செலுத்தல் வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் முறைபடி தங்களால் அதற்கு உதவுதொகை செலுத்தல் வேண்டும்.

II. தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் கொழும்பு பிரதான அலுவலகத்தில் மட்டும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் உள்ள அரச சேவையின் நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம் :**

MT1 – 2016 ரூபா 29,840-10 × 300-11× 350-10 × 560-10× 660- ரூபா 48,890.

- இந்த சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுவதுடன்.

  அ. நி. சு. 03/2016 இல் அட்டவணை II இன் படி சம்பளம் செலுத்தப்படும்.

தர முறைக்கு அமைவாக ஆரம்ப சம்பளப் படிநிலை

| தரம் | ஆரம்ப சம்பள படிநிலை | ஆரம்ப சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|
| III | படிநிலை 01 | ரூபா. 29,840 |
| II | படிநிலை 12 | ரூபா. 33,190 |
| I | படிநிலை 23 | ரூபா. 37,250 |

6. **வயதெல்லை:-**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாது இருத்தல் வேண்டுமென்பதுடன், 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

7. **கல்வி தகைமைகள் :**

*1- தகைமைகள் .-*

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர பரீட்சையில் (சாதாரண தரப் பரீட்சையில்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கல்வி பொது தராதர (உயர் தரம்) பரீட்சையில் எந்தவொரு பாட துறையிலும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)

மற்றும்

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப கல்லூரியொன்றில் வழங்கப்படும் துறைக்கு ஏற்புடையதான ஓராண்டு பாடநெறியொன்றை கற்றிருத்தல்.

அல்லது

*2- தகைமைகள்.-*

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சையில்) சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

மற்றும்

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் துறைக்கு எற்புடையதாக NVQ 04 மட்டத்திலான பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

*3. தகைமைகள்.-*

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொது தராதரப் பத்திர (சதாதாரண தரப் பரீட்சையில்) சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

மற்றும்

அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப கல்லூரியொன்றில் வழங்கப்படும் துறைக்கு ஏற்புடையதான ஓராண்டு பாடநெறியொன்றை கற்றிருத்தல்.

**(குறிப்பு**. — 1 மற்றும் 2 தகைமைகள் தொகுதிகளின் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள போதியளவு விண்ணபத்தாரிகள் இல்லையென்றால் மட்டும் மேற்படி 1 மற்றும் 2 இல் காட்டப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்த பின்னர் எஞ்சியுள்ள வெற்றிடங்களின் பொருட்டு 3 தகைமைகள் தொகுதியின் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

நடாத்தப்படும் எழுத்திலான பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கை மீது மட்டும் நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படும்.

9. ஒவ்வொரு விண்ணப்பதாரியையும் பதவிக்கான எல்லா தகைமைகளையும் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

10. விண்ணப்பப்படிவங்கள் மற்றும் எனைய விபரங்கள்:

(அ) I. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் படி செ. மீ. 21 x 29 (A4) அளவிலான கடதாசிகளில் தாம் விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் முதலாவது பக்கத்தில் இலக்கம் தொடக்கம் 04 வரையிலும், 02 ஆவது பக்கத்தில் இலக்கம் 05 தொடக்கம்

09 வரையும் 03 ஆவது பக்கத்தில் இலக்கம் 10 தொடக்கம் 12 வரையும், பந்திகளை உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அதன் கீழ் பகுதியில் ஒட்டிவிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவி – திறந்த" என்று குறிப்பிட்டு 2018.08.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "நில அளவையாளர் நாயகம், நிலஅளவைத் திணைக்களம், கிருள வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறு எதுவித முகவரிக்கும் அனுப்புதலாகாது).

II. பூரணமற்ற, உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதுள்ள அல்லது தாமதமாகி கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும் ;

III. அஞ்சலில் காணமல் போகும் விண்ணப்பபடிவங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்படமாட்டாது ;

IV. எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது;

V. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்மாட்டது.

(ஆ) விண்ணப்பபடிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி அல்லது தரைப்படையின், விமானப் படையின் அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள பதவியை வகிக்கும் அலுவலரொருவர் அல்லது அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இற்கு அமைவாக தொழில்சார் அல்லது சிரேட்ட மட்டத்தின் அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலரொருவரால் சான்றுப்படுத்தலாம்.

11. பின்வரும் ஆவணங்களையும் கோரப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்:-

I. பிறப்புச் சான்றிதழ்;

II. கல்விச் சான்றிதழ்கள்;

III. அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;

IV. இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

**கவனத்தில் கொள்ளவும்** :- கல்வி, தொழில்சார் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

12. தற்போதும் அரசாங்க சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பபடிவங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

13. பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். எந்தவொரு மாவட்ட நிலஅளவையாளர் அலுவலகத்திடம் அல்லது பிரதான அலுவலகத்தில் சிறாப்பரிடம் பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை, விண்ணப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டிவிடுதல் வேண்டும். காசுக்கட்டளைகள் அல்லது பணக் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14. **பரீட்சை நடாத்தப்படும் நிலையங்கள்**:

பிரதான அலுவலகத்தில் அல்லது வேறு பொருத்தமான நிலையமொன்றில் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி விண்ணப்பதாரிகளுக்கு பின்னராக அறிவிக்கப்படும்.

15. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.-

விண்ணப்பங்கள் அனுப்பிவைத்துள்ள மற்றும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள எல்லா விண்ணப்பதாரிகளுக்கும் அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுமதி அட்டை தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தமது அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்திகள் தமக்குரிய பரீட்சை மண்டபத்திலயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு** .- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் என்பது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ இப்பதவிக்குரிய தகைமைகளை பூரணப்படுத்தியவர் என்பதற்கோ அங்கீகாரமெனக் கருதப்படலாகாது.

16. **பரீசார்த்தியின் ஆளடையாளம்**:-

பரீட்சார்த்தியொருவர் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) ஆட் பதிவுத் திணைக்களம் மூலம் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

17. **பொய்யான தகவல்களை வழங்குதலுக்கான தண்டனை**:

பரீட்சார்த்தியொருவருக்கு தகைமைகள் இல்லையென வெளிப்பட்டால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும் காலத்தில் அல்லது பரீட்சைக்கு பின்னர் எந்தவொரு வேளையிலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள எந்தவொரு தகவலும் அது பொய்யெனத் தெரிந்துகொண்டே அவரால் வழங்கப்பட்டிருந்தால் அல்லது ஏதேனும் முக்கிய தகவலை மறைத்திருப்பது அவர் தெரிவு செய்யப்பட்ட பின் அறிய வந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட இடமுணடு.

18. **மொழிமூலம்**:

இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பதாரிகளுக்கு விருப்பமான மொழிமூலத்தில் அதற்கு தோற்றலாம். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

19. இந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் நில அளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

பீ. எம். பி. உதயகாந்த,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, யூலை 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

இலங்கை நிலஅளவையாளர் திணைக்களத்தில் அளவை உபகரணத் தொழில்நுட்பவியலாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

Specimen Application Form for the open Competitive Examination for recruitment to the Post of Survey Instrument Technician Grade III – 2018 in the Department of Survey

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழியிலான விண்ணப்ப படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

[ ]
அலுவலக உபயோகத்திற்காக மட்டும்

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2 [ ]
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1.0 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ...... (உதா. : PERERA, A. B.C). …………………......................

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ..................................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ............................

1.4 தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம்: | | | | | | | | | | | | |

1.5 பால்: பெண் - 1
ஆண் - 2 ☐

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதுக)

2.2 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): .........................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்): ..........................................

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ............................

2.4 தொலைபேசி இலக்கம் (இருப்பின்): ..............................................

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர மாவட்டம்: ................................................

3.2 பிரதேச செயலகப் பிரிவு: ................................................

3.3 வதிவிடமாக கொண்ட காலப்பகுதி: ........................................

3.4 கிராம அலுவலர் பிரிவு :............................................

4.0 பிறந்த திகதி: ஆண்டு :........................... மாதம்: ...................... திகதி : .................

2018.08.20 ஆந் திகதிக்கு வயது: வருடங்கள் : ............... மாதங்கள் : .................. நாட்கள் :....................

5.0 கல்வித் தகைமைகள் (உரிய சான்றிதழ்களில் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :-

5.1 க. பொ. தராதர (சாதாரண தரப்) பரீட்சை தொடர்பான விபரம் :

I. பரீட்சையின் ஆண்டு மற்றும் மாதம் :............................................
II. சுட்டிலக்கம்:............................................
III. பெறுபேறு:............................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

5.2 க. பொ. தராதர (உயர் தரப்) பரீட்சை தொடர்பான விபரம்:

I. பரீட்சசையின் ஆண்டு மற்றும் மாதம் :............................................
II. சுட்டிலக்கம்:............................................
III. பெறுபேறு:............................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

6.0 தொழில்சார் தகைமைகள்: (உரிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

6.1 கற்றுள்ள பாடநெறி: ……………………………………

6.2 பாடநெறி கற்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர்: ……………………………………

6.3 பாடநெறியின் காலம்: ……………………………………

7.0 ஏனைய தகைமைகள்:

……………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

8.0 நீங்கள் என்றாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டில் "✓" அடையாளம் இடவும்.)

ஆம் ☐ இல்லை ☐

"ஆம்" எனில், விபரங்களைக் குறிப்பிடுக …………………………………………………………………

9.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள்:

i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம்: ……………………………………

ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :……………………………………

iii) செலுத்திய தொகை: ரூபா …………………………………… :

| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தங்கள் வசம்<br>வைத்துக்கொள்ளவும்) |
|---|

10.0 விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதேனும் பகுதிகளை பூர்த்தி செய்யாமல் மற்றும் / அல்லது பிழையாக பூர்த்தி செய்வதால் ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன். மேலும் இங்கு எல்லா பகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் கூறப்பட்ட இந்தக் கூற்று பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால் நியமனம் செய்வதற்கு முன்னர் தகைமையற்றவரெனவும், நியமனம் பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்தல் தொடர்பாக நிலஅளவையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பாக மேற்கொள்கின்ற தீர்மானங்கள் என்பவற்றுக்கு நான் உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதுவித தகவல்களையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………………
கையொப்பம்.

திகதி ……………………………………

11.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல்:

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிவேன் எனவும், அவர்.................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டாரெனவும் உறுதி செய்கின்றேன்.

……………………………………
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர்: ……………………………………
பதவி: ……………………………………
முகவரி: ……………………………………
(உத்தியோகபூர்வ முத்திரையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்)
திகதி ……………………………………

12.0 தற்போதும் அரசாங்க சேவையில் அல்லது பகுதி நேர அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும்.

திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவர் இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ........................................ ஆந் திகதி தொடக்கம் ......................... ஆந் திகதி வரை .................................ஆக பணியாற்றுவதுடன், அவருக்கு எதிராக முடிவுபெறாத ஒழுக்காற்று குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது/ பதிவு செய்யப்படவில்லை. அவரது வேலை, நடத்தை மற்றும் வருகை திருப்திகரமானதாகும் / திருப்தியற்றதாகும். உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளதாகவும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும், அவர் ................................. பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இத் திணைக்களத்திலிருந்து/நிறுவனத்திலிருந்து விடுவிக்க முடியுமெனவும்/விடுவிக்க இயலாதெனவும் அறிவிக்கின்றேன்.

........................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

7-647

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.